## மத்திய கல்வி அமைச்சக தரவரிசை பட்டியலில்
## முதல் 97 இடங்களில் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரி

மத்திய கல்வி அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட கல்வி நிறுவனங்களின் தரவரிசை பட்டியலில் தனியார் பொறியியல் கல்வி நிறுவனங்களின் வரிசையில் அகில இந்திய அளவில் முதல் 97 இடங்களில் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியும் இடம் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த 97 கல்லூரிகளில் தமிழகத்தைச் சேர்ந்த 36 கல்லூரிகளும் அடங்கும். தனியார் பொறியியல் கல்லூரி பிரிவில் மொத்தம் 708 கல்லூரிகள் பங்கேற்றன. அகில இந்திய அளவில் அனைத்து பிரிவுகளிலும் 1438 கல்வி நிறுவனங்கள் பெற்றன. பல்வேறு வகையான காரணிகளை அடிப்படையாக வைத்து மத்திய அரசு கல்லூரிகளை தரவரிசை படுத்தியது. அதில் முதன்மையானது காப்புரிமைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் தரம், புதுமையான தொழில் செய்வோரை ஊக்குவிப்பது, உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதி மேலும் சிறந்த ஆராய்ச்சிக்கான சூழல், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆராய்ச்சி வெளியீடுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தரவரிசை இணைக்கப்படுகிறது.

இவை அனைத்தும் நமது கல்லூரியில் சிறப்பாக செயல்படுவதால் நம்மால் இந்த உயரத்தை எட்ட முடிந்தது என கல்லூரியின் தாளாளர் டாக்டர். சின்னத்துரை அப்துல்லா அவர்கள் கூறினார். மேலும் இம்மாதிரியான செயல்பாடுகளை மேம்படுத்தி வரும் காலங்களில் முதல் 5 கல்லூரிகளுக்குள் இடம் பெறச்செய்ய அனைத்து முயற்சிகலும் எடுக்கப்படும் என்று கூறினார். நமது கல்லூரியின் வரலாற்றில் இது ஒரு மைல்கல்லாக அமையும் எனவும், மேலும் இந்த வருடத்தில் இரண்டு பாடப்பிரிவுகளுக்கு NBA தரச்சான்றிதழ்களையும் இரண்டு பாடப்பிரிவுகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு மற்றும் அண்ணா பல்கலைக்கழக பட்டியலில் 50 வது இடத்தைப் பிடித்தது பெருமைமிகு தருணங்கள் என கூறினார். இத்தருணத்தில் இதற்காக பாடுபட்ட கல்லூரி முதல்வர், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள், பணியாளர்கள் அனைவரையும் வெகுவாக பாராட்டினார்.